1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

விசைப்படகுகள் ஒதுக்கீடு

* 307 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைப் படகு ஒதுக்கக் கோரி சென்ற ஆண்டில் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(இ) எத்தனை பேருக்கு ஒதுக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) மீனவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் நடைமுறை 1968 முதல் நிறுத்தப்பட்டது. எனினும், அகதிகள் வேலையிழந்த பொற்கொல்லர்கள் ஆகியோரிடமிருந்து வரும் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதை அரசு அனுமதித்தது. அவ்வண்ணமே, 1971-72-ல் 6 விண்ணப்பங்கள் வரப்பெற்றன.

(இ) 1971-72-ல், 154 படகுகள் (32 அடி நீளமுள்ள 44 படகுகளும், 30 அடி நீளமுள்ள 110 படகுகளும்) அதே எண்ணிக்கையுள்ள மீனவர் தொகுதியினருக்கு வழங்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எஞ்சியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு எப்பொழுது ஒதுக்கப்படும். இந்த ஆண்டு எப்பொழுது குலுக்கல் நடைபெறும் ? குலுக்கல் நடைபெறும்பொழுது எல்லா விண்ணப்பதாரர்களுடைய சீட்டுகளும் ஒன்றாகச் சேர்த்துக் குலுக்கல் நடைபெறுமா? அல்லது மாவட்ட வாரியாக வந்த விண்ணப்பங்களை வைத்துக் குலுக்கல் நடைபெறுமா என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்னமும் 1,193 படகுகள் வழங்கப்பட வேண்டியிருக்கின்றன பயிற்சி பெற்றவர்கள் பயிற்சி பெறாதவர்கள், வழங்கப்பட்ட இடம். வழங்கப்படாத இடம் என்ற அடிப்படையிலே விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பிறகுதான் இயக்குநர் அவர்கள் மாவட்டவாரியாக குலுக்கலை நடத்துகிறார்கள்.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் இருந்து எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா? எத்தனை படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இராமேஸ்வரம் என்று இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்னமும் 89 படகுகள் கொடுக்கப்படவேண்டியிருக்கின்றன.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த விசைப் படகுகள் கோரி நிறைய மனுக்கள் வருவதால் அத்தனை பேர்களுக்கும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மனுக்கள் கொடுக்கிறவர்களில் தகுதி உள்ளவர்களுக்குத்தான் கொடுக்கலாம். தகுதி பெற்றிருக்கிறார்களா என்று பரிசிலனை செய்ததற்குப் பிறகுதான் குலுக்கல் சீட்டு முறையின் மூலமாகப் படகுகள் வழங்கப்படுகின்றன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, does the Hon. Minister know that most of the 36-foot mechanised boats are out of order and if so, have the Government probed into the reasons for that?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி. மெக்கனைஸ்டு போட்ஸ் எத்தனை சீரடைந்திருக்கின்றன என்ற தகவல் என்னிடத்திலே இல்லை.

நைலான் வலை தயாரிப்பு

*308 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நைலான் மீன் வலை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆமெனில், எப்போது எந்த மாவட்டத்தில் ?